# 1 பவனி வரும் நிலா



சந்திரன் அழகானது. சந்திரனை நிலா, அம்புலி, நிலவு, மதி எனவும் அழைப்பதுண்டு. பல புலவர்கள் சந்திரனை வர்ணித்துப் பாடல்கள் பாடியுள்ளார்கள்; கவிதைகள் இயற்றியுள்ளார்கள். கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள் சந்திரோதயத்தை எவ்வாறு வர்ணிக்கின்றார் எனப் பார்ப்போம்.

1. மீனினம் ஓடிப் பரக்குதம்மா - ஊடே
வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா
வானுங் கடலாக மாறுதம்மா - இந்த
மாட்சியி லுள்ளம் முழுகுதம்மா.

2. அம்புயம் வாடித் தளர்ந்ததம்மா - அயல்
ஆம்பலும் கண்டு களிக்குதம்மா
இம்பருலகின் இயல்பி தம்மா - மதிக்
கின்னார் இனியாரும் உண்டோ அம்மா.

3. சின்னஞ் சிறுவில்லாய்க் கண்டதம்மா - பின்னர்ச்
செம்பொற் குடம்போலே தோன்றுதம்மா
என்ன அதிசயம் பாராயம்மா - ஈதோர்
இந்திர சாலமோ கூறாயம்மா.

4. வளர்ந்து வளர்ந்து பெருகுதம்மா - உடல்
வட்டந் திருந்தி வருகுதம்மா
தளர்ந்து தளர்ந்துபின் போகுதம்மா - கண்ணிற்
சற்றுந் தெரியாமல் ஆகுதம்மா.

- கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை

## பொழிப்பு

1. அம்மா, இந்த ஆகாயம் கடலைப்போலத் தோன்றுகிறது. அந்தக் கடலிலே, வெள்ளியாற் செய்த தோணி ஒன்று மிதந்து செல்வதுபோல சந்திரன் காணப்படுகிறது. வானத்திலுள்ள நட்சத்திரங்கள் கடலிலுள்ள மீன்களைப் போல பரவுகின்றன. இந்த அழகிலே என்மனம் மிகவும் மகிழ்கிறது.

2. அம்மா, சந்திரன் உதயமாகும்போது தாமரை மலர்கள் துன்பமடைகின்றன. ஆம்பல் மலர்கள் மலர்ந்து மகிழ்ச்சியடைகின்றன. ஒருவர் துன்பமடைய மற்றொருவர் மகிழ்ச்சி அடைவதுதான் இந்த உலகத்தின் இயல்பு. ''சந்திரனுக்குப் பகைவர், நண்பர்'' என்று இவ்வுலகில் யாரேனும் உளரோ.

3. தாயே, சந்திரன் சிலநாட்களுக்கு முன்பு ஒரு சிறிய வில்லைப் போல

வளைவாகக் காணப்பட்டதே. இப்பொழுது பொன்னாற் செய்த குடம் போலத் தோன்றுகிறதே. இஃது என்ன அதிசயம்! இஃது இந்திரசால வித்தையோ கூறு.

4. அம்மா, சந்திரன் வளர்ந்து பெருகிப் பூரணமான வட்டவடிவமாகி விட்டது. பின்னர் மறுபடியும் தேய்ந்து தேய்ந்து போகிறது. அது கண்ணுக்கே சற்றும் தெரியாமற் போய்விடுகிறது.

## அரும்பதங்கள்

| | |
|---|---|
| மீனினம் | - நட்சத்திரக் கூட்டம் |
| பரக்குது | - பரவுகிறது |
| இன்னார் இனியார் | - பகைவரும் நண்பரும் |
| இந்திரசாலம் | - கண்கட்டு வித்தை |
| வட்டம் திருந்தி | - வட்டவடிவம் எய்தி |
| இம்பருலகின் | - இந்த உலகின் |

### அகராதிப் பயன்பாடு




ஓடம் -

மாட்சி -

அம்புயம் -

வான் -

உள்ளம் -

தளர்ந்து -

பயிற்சி

### 1.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.


1. தாமரை எப்போது வாட்டமடையும்? அப்போது மலரும் பூ எது?
2. பாடலில் மீனினம் எனக் குறிப்பிடப்படுவது எது?
3. சந்திரனின் இருவேறு தோற்றங்கள் எவ்வாறு கூறப்பட்டுள்ளன?
4. இம்பருலகின் இயல்பாகக் கூறப்பட்டிருப்பது யாது?
5. ஆகாயத்தைக் கடலாகக் கூறி, சந்திரனை எதுவாகக் குறிப்பிடுகிறார்?

## 1.2 சேர்த்தெழுதுவோம்.

i. மீன் + இனம் =
ii. ஓடம் + ஒன்று =
iii. மாட்சியில் + உள்ளம் =
iv. பொன் + குடம் =
v. தோன்றுது + அம்மா =

## 1.3

### (அ) சரியான ஓரெழுத்துச் சொல்லைத் தெரிவுசெய்து எழுதுவோம்.




1. அரசனைக் குறிப்பது :............
2. கண்ணிலிடும் எழுத்து :............
3. சுமக்கும் எழுத்து :............
4. பசுவைக் குறிக்கும் எழுத்து :............
5. பேச உதவும் எழுத்து :............

### (ஆ) தரப்பட்டுள்ள சொற்களில் ஒன்று அல்லது இரண்டு எழுத்துகளை நீக்கிப் புதிய சொற்களை உருவாக்குவோம்.

1. பயணம் - ஓர் எழுத்தை நீக்கினால் கிடைப்பது அச்சம் .....................
2. அசுத்தம் - ஓர் எழுத்தை நீக்கினால் கிடைப்பது தூய்மை ......................
3. மக்கள் - ஓர் எழுத்தை நீக்கினால் புத்திரி வருவாள் ..........................
4. கவின் - ஓர் எழுத்தை நீக்கினால் கவிஞரால் உருவாக்கப்படுவது கிடைக்கும் ............................................................................
5. கருணை - ஓர் எழுத்தை நீக்கினால் வேடன் கையில் இருப்பது ..........
6. வாழ்க்கை - இரு எழுத்துகளை நீக்கினால் மரங்களில் ஒன்று ................
7. அவமானம் - இரு எழுத்துகளை நீக்கினால் அடவியின் ஒத்த பதம் ......

## தமிழ் எழுத்துகள்

தமிழில் உள்ள எழுத்துகளை உயிர் எழுத்துக்கள், மெய் எழுத்துகள், உயிர்மெய் எழுத்துகள் மற்றும் ஆய்த எழுத்து என வகைப்படுத்தலாம்.

### உயிர் எழுத்துகள்

| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |

### மெய் எழுத்துகள்

| க் | ங் | ச் | ஞ் | ட் | ண் | த் | ந் | ப் | ம் | ய் | ர் | ல் | வ் | ழ் | ள் | ற் | ன் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |

உயிர் எழுத்துகள் 12, மெய்யெழுத்துகள் 18 ஆகிய முப்பது எழுத்துகளும் முதல் எழுத்துகள் ஆகும்.

### உயிர்மெய் எழுத்துகள்

உயிர் எழுத்க்களும் மெய் எழுத்துகளும் சேர்ந்து உயிர்மெய் எழுத்துகள் உண்டாகின்றன.

மெய் + உயிர் = உயிர்மெய்

க் + இ = கி

### ஆய்த எழுத்து

தமிழ் மொழியில் ஃ என்று ஓர் எழுத்து உள்ளது, இதை ஆய்த எழுத்து என்று கூறுவர்.

**தமிழில் உள்ள மொத்த எழுத்துகள்**

| | |
|---|---|
| உயிர் எழுத்துகள் | 12 |
| மெய் எழுத்துகள் | 18 |
| உயிர் மெய் எழுத்துகள் | 216 |
| ஆய்த எழுத்து | 1 |
| மொத்தம் | 247 |

தமிழ் – 5

## வல்லின, மெல்லின, இடையின எழுத்துகள்

வல்லினம்

வன்மையான ஓசையுடைய எழுத்துகள் வல்லினமாகும்.

க், ச், ட், த், ப், ற்

| | | | |
|---|---|---|---|
| உதாரணம் - | பாக்கு | பச்சை | கட்டு |
| | கத்தி | பருப்பு | நெற்றி |

மெல்லினம்

மென்மையான ஓசையுடைய எழுத்துகள் மெல்லினமாகும்.

ங், ஞ், ண், ந், ம், ன்

| | | | |
|---|---|---|---|
| உதாரணம்- | சங்கு | பஞ்சு | நண்டு |
| | பந்து | பழம் | தேன் |

இடையினம்

வல்லினம் மற்றும் மெல்லின ஓசைகளுக்கு இடைப்பட்ட ஓசையுடைய எழுத்துகள் இடையினமாகும்.

ய், ர், ல், வ், ழ், ள்

| | | | |
|---|---|---|---|
| உதாரணம் - | காய் | தேர் | கால் |
| | செவ்வாய் | வாழ்க | தாள் |

**1.4**

### (அ) பொருத்தமான எழுத்துகளை இடைவெளியில் எழுதுவோம்.

**ண் ப் ன் ற் ர் ம் ச் ல் ஞ் க் ட்**

**ழ் ய் ள் ங் ந் வ் த்**

1. வல்லின எழுத்துகள் : ........................................................................................

2. மெல்லின எழுத்துகள் : ........................................................................................


3. இடையின எழுத்துகள் : ........................................................................................





இலவசப் பாடநூல்

**(ஆ) வெற்றுக்கூடுகளில் பொருத்தமான எழுத்துகளின் எண்ணிக்கையை எழுதுவோம்.**




**(இ) சரியான விடையின் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுவோம்.**

1. உயிர் எழுத்துகள் எத்தனை?

   i. பதினெட்டு    ii. பன்னிரண்டு    iii. முப்பது

2. மெய் எழுத்துகள் எத்தனை?

   i. முப்பது    ii. பதினெட்டு    iii. பன்னிரண்டு

3. உயிர்மெய் எழுத்து எது?

   i. அ    ii. ப்    iii. கி

4. ஆய்த எழுத்து எது?

   i. ப்    ii. ஃ    iii. ஐ

**1.5 பின்வரும் வாக்கியங்களிலிருந்து வல்லினம், மெல்லினம், இடையினம் என எழுத்துகளை வகைப்படுத்தி எழுதுவோம்.**

உதாரணம் : பூவின் மணம் மனதிற்கு இன்பம் தரும்.

| வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|
| ற் | ன், ம் | - |

1. இட்லி பஞ்சு போன்று மென்மையாக இருந்தது.

| வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|
| | | |

2. ஓடிச் சென்ற கந்தன் கால் தடுக்கிக் கீழே விழுந்தான்.

| வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|
| | | |

3. கடற்கரையில் சிறுவர்கள் பட்டம் விட்டு விளையாடினார்கள்.

| வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|
| | | |

4. நம் தாய்மொழியாகிய தமிழ் மொழியை நன்றாகக் கற்க வேண்டும்.

| வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|
| | | |

***செயற்பாடு 1.1***

''பவனி வரும் நிலா'' என்ற பாடலை ஆசிரியரின் துணையுடன் குழுக்களாக இணைந்து பாடுக.